**விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம் - 2013**

விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1996 பெப்ரவரி 09 ஆம் திகதிய 909/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டளைகளின் 21 ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) உப பிரிவு, 108 மற்றும் 111 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுக் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து விஞ்ஞான பட்டபின் படிப்பு நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் பிரயாணச் செலவினத்திற்காக ரூபா 28,523 தொகையும் பரீட்சை செலவினத்திற்காக ரூபா 17,950 தொகையும் அட்டுறு செலவினமாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டின் போது முறையே ரூபா 56,891 மற்றும் ரூபா 241,754 செலுத்தப்பட்டிருந்ததால் நிதிக்கூற்றுக்களில் ரூபா 252,172 தொகை நடைமுறை பொறுப்பில் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) வாகனங்களை வாடகைக்கு வழங்கியதால் கிடைத்த வருமானமாக ரூபா 490,798 தொகை விரிவான வருமானக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது நிறுவகத்திடமுள்ள பஸ் மற்றும் வான் வண்டி என்பவற்றை வாடகைக்கு வழங்கியதால் கிடைத்த வருமானத்தின் கூட்டுத்தொகை ரூபா 1,031,311 ஆக இருந்தமையால் ரூபா 540,513 ஆல் வருமானம் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் ஆய்வுகூட கற்பித்தல் உபகரணங்கள், தொலைபேசி மற்றும் அலுவலக உபகரணங்களின் பெறுமதி ரூபா 85,619,179 ஆக இருந்த போதிலும், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு புத்தக மீதியாக ரூபா 26,887,075 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.2 இணக்கம் செய்யப்பப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

கணக்குகள் மற்றும் உப அறிக்கையின் பிரகாரம் மீதிகளில் இணங்காத வேறுபாடுகள் ரூபா 5,046,605 ஆக இருந்தன. வபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| கணக்கின் பெயர் | கணக்கின் பிரகாரம் மீதி | உப அறிக்கையின் பெயர் | உப அறிக்கையின் பிரகாரம் மீதி | வேறுபாடு |
|---|---|---|---|---|
| | ரூபா | | ரூபா | ரூபா |
| வட்டி வருமானம் | 12,497,460 | காசுப் பாய்ச்சல் கூற்று | 17,439,065 | 4,941,605 |
| ஆராய்ச்சி மானியங்கள் | 14,888,583 | கணக்கீட்டுக் குறிப்பு | 14,993,583 | 105,000 |
| மொத்தம் | 27,386,043 | | 32,432,648 | 5,046,605 |

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

மீளாய்வாண்டில் ரூபா 8,110,415 கூட்டுத்தொகையான கீழே காட்டப்பட்டுள்ள 03 கணக்கு விடயங்களுக்கு முன்னால் காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

| விடயங்கள் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| வெளிவாரி விரிவுரைக் கட்டணங்கள் | 3,613,332 | கடன்கொடுத்தோர் உறுதிப்படுத்தல் |
| நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் | 1,553,807 | நாட்குறிப்பு உறுதிச்சீட்டுகளுக்கான உரிய அங்கீகாரம் |
| ஊழியர் கடன் | 2,943,276 | கடன் மேவுகை கோவை |
| | 8,110,415 | |

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

கீழே காட்டப்பட்டுள்ள இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவக வழிகாட்டி | |
| (i) 1996 பெப்ரவரி 09 ஆம் திகதிய 909/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரத்தில் வெளியிடப்பட்ட நிறுவக வழிகாட்டியின் இலக்கம் 4(K) பிரிவு | பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இணக்கப்பாடொன்றில்லாமல் 10 கற்கைச் சபைகளுக்காக பல்கலைக்கழக கல்விசார் பதவியணியினராக 324 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். |
| (ii) 1996 பெப்ரவரி 09 ஆம் திகதிய 909/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானிப் பத்திரத்தில் வெளியிடப்பட்ட நிறுவக வழிகாட்டியின் இலக்கம் 11(h) மற்றும் I பிரிவு | நிறுவக நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்காக துணை சட்டவிதி வழிகாட்டி காட்டியொன்று தயாரித்துக் கொள்ள வேண்டிய போதிலும், 2013 திசெம்பர் 31 வரையிலும் துணை சட்டவிதி வழிகாட்டி கோவையொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| (i) IX ஆம் அத்தியாயத்தின் 2.2 ஆம் பந்தி | பல்கலைக்கழகத்தின் குறுகியகால பாடநெறி களில் சேவை புரியும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்களுக்கு செலுத்தப்பட்ட கூட்டிணைப்புக் கொடுப்பனவுகளில் 10 சதவீதம் திரட்டு நிதிக்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| | அவ்வாறு செலவு வைக்க வேண்டிய தொகை ரூபா 92,392 ஆக இருந்தது. |
| (ii) XXIV ஆம் அத்தியாயத்தின் 3.5 ஆம் பந்தி | மீளாய்வாண்டின் ஏப்ரல் மற்றும் திசெம்பர் மாதங்களுக்காக ரூபா 170,000 தொகையான கடன் மற்றும் வட்டி உரிய தவணைப் பணம் என்பன அம்மாதங்களில் அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| நிதிப் பிரமாணம் 371 | (i) ரூபா 100,000 கூட்டுப் பெறுமதியான முற்பணத் தொகைககள் பதவிநிலைத் தரமல்லாத 04 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. |
| | (ii) 36 சந்தர்ப்பங்களில் ரூபா 2,006,889 கூட்டுப் பெறுமதியான முற்பணங்கள் உரிய எல்லையை விஞ்சி வழங்கப்பட்டிருந்தன. |
| | (iii) 12 சந்தர்ப்பங்களில் தேவையான அளவை விட கூடுதலாக ரூபா 189,074 ஆன முற்பணங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு மீளாய்வாண்டில் காசாகத் தீர்வு செய்யப்பட்டிருந்தன. |
| (ஈ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றிக்கையின் 02 ஆம் பந்தி | கணனிகள், உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டி ருக்கவில்லை. |
| (உ) 2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.2 ஆம் பந்தி மற்றும் 5.2.1 ஆம் பிரிவு | மனித வள திட்டமிடல் ஒன்று மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், பாதிடப்பட்ட அறிக்கையுடன் பாதீடு செய்யப்பட்ட ஐந்தொகையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2013 ஆம் ஆண்டிற்காக பாதீடு செய்யப்பட்ட ஐந்தொகையொன்று சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஊ) | 2010 யூன் 07 ஆம் திகதிய 10/2010 ஆம் பொது நிர்வாக சுற்றறிக்கை | பெற்றோல் மோட்டார் வண்டியொன்றுக்கு ஒரு கிலோ மீற்றருக்கு ரூபா 12 போக்குவரத்து படிகள் செலுத்தப்பட வேண்டிய போதிலும், ஒரு கிலோ மீற்றருக்கு ரூபா 25 மற்றும் ரூபா 17 வீதம் கொடுப்பனவு செய்த காரணத்தினால் ரூபா 41,882 தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. |

## 2.4 போதியளவான அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1994 யூன் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை மற்றும் 2003 சனவரி 29 ஆம் திகதிய PE 1/174/1-2003 ஆம் இலக்க நிதி அமைச்சின் சுற்றறிக்கைகளுக்கு இணங்காத வகையில் 21 சந்தர்ப்பங்களின் போது ரூபா 924,018 கூட்டிணைத்தல் கொடுப்பனவுக்காகவும் ரூபா 101,222 கௌரவக் கொடுப்பனவுகளாகவும் நிறுவகத்தினால் செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) முறையே 1989 யூலை 31, 1990 மார்ச் 22, 1991 ஏப்ரல் 24, 1995 ஒக்தோபர் 01, 1998 ஏப்ரல் 28 ஆம் திகதிய 38/89, 38/89(1), 38/89(11), 38/89(111) மற்றும் 29/98 ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் இரண்டாம், மூன்றாம் மொழித்தேர்ச்சி படிகள் மற்றும் சம்பள ஏற்றங்களை பெற்றுக்கொள்வதற்கு இந்த நிறுவகத்தின் உத்தியோகத்தர்கள் / ஊழியர்களுக்கு உரித்தற்ற போதிலும், அதற்கு இணங்காத வகையில் செயற்பட்டு 1997 ஆம் ஆண்டு முதல் 2013 மே மாதம் வரை ரூபா 263,560 ஆன மொழித்தேர்ச்சி கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தன.

(இ) 2006 சனவரி 17 ஆம் திகதிய PED/35 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கொடுப்பனவு நிறைவேற்றுப் பணிப்பாளர்களுக்கு மாத்திரம் கொடுப்பனவு செய்ய முடியுமாக இருந்த போதும், அதற்கு முரணாக 10 கற்கை சபை செயலாளர்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 92,400 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 3 நிதி மீளாய்வு

### நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மிகை ரூபா 23,227,021 ஆக இருந்ததுடன், அதற்கு ஒத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 22,990,263 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 236,758 ஆன அதிகரிப்பொன்று காணப்பட்டது.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

1996 பெப்ரவரி 09 ஆம் திகதிய 909/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட நிறுவக கட்டளைகளின் 4(I) ஆம் இலக்க பிரிவின் பிரகாரம் புலமைப்பரிசில், மாணவர் உதவி, பதக்கம் மற்றும் ஏனைய பரிசுகள் போன்றவற்றை வழங்குதல் மற்றும் கண்காட்சிகளை நடாத்துதல் என்பன மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது அந்நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

வனவள முகாமைத்துவ ஆராய்ச்சி செயற்திட்டத்திற்காக 2008 யூலை 25 ஆம் திகதி நிறுவகத்திற்கு கிடைத்த ரூபா 321,450 தொகை செயற்திட்டத்திற்குப் பொறுப்பான பேராசிரியரின் பெயரில் தனிப்பட்ட கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக பல்வேறு சந்தர்ப்பங்களில் இச்செயற்திட்டத்திற்காக கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 798,658 தொகை குறித்த பேராசிரியரின் தனிப்பட்ட பெயரில் 04 நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தன.

### 4.3 தாமதமான திட்டங்கள்

உத்தேச பதுளை – கண்டி அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணிக்கும் போது ஏற்படும் சுற்றாடல் தாக்கம் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையொன்றை தயாரிப்பதற்காக நிறுவகப் பணிப்பாளர் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்துடன் ஆகஸ்ட் மாதம் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் குறித்த அறிக்கை 2012 நவம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், கணக்காய்வு திகதியான 2014 மார்ச் 31 ஆம் திகதி வரையில் அத்திட்டம்

சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் இச்செயற்திட்டத்திற்காக 2012 ஆம் ஆண்டிலிருந்து 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 3,175,980 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

**4.4 முறையான விதத்தில் கையேற்கப்படாத காணிகள்**

நிறுவகத்தின் கட்டிடச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 69,452,294 ஆக இருந்த போதிலும், கட்டிடம் அமைந்துள்ள காணி அதன் உரித்து பேராதனைப் பல்கலைக்கழகத்திடமிருந்து நிறுவகத்திற்கு கையேற்பதற்கு 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.5 பதவியணி நிர்வாகம்**

விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 38 ஆக இருந்ததுடன், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்பட்ட 15 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 கூட்டுத் திட்டம்**

கூட்டுத் திட்டத்தில் உள்ள தகவல்கள் பாதீடு செய்யப்பட்டுள்ள தரவுகளுடன் ஒப்பீடு செய்யப்படாமல் இருந்தமையால் 2010 சனவரி 10 ஆம் திகதி வழங்கப்பட்ட கூட்டுத்திட்டம் பயனுள்ள திட்டமொன்றாக அவதானிக்கப்படாமல் இருந்ததுடன், 06 விடயங்களுக்குரிய கூட்டுத்திட்டத்தின் மீளாய்வாண்டிற்குரிய தரவுகளின் பிரகாரம் ரூபா 115,750,000 கூட்டுத்தொகையாக இருந்ததுடன், பாதீடு செய்யப்பட்ட தரவுகளின் பிரகாரம் அந்த விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 93,100,000 ஆக இருந்தமையால் ரூபா 22,650,000 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**5.2 உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டிற்காக கணக்குகள் மற்றும் நிதிக்கட்டுப்பாடு தொடர்பாக உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 5.2.5 ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த பாதீட்டு அறிக்கை கூட்டுத்திட்டத்தின் பிரகாரம் நீண்டகால நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் வகையிலும் ஆண்டின் ஆரம்பத்தின் போது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் வகையிலும் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் பணிப்பாளருக்கு அவ்வப்போது அறிக்கைகள் மூலம் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) ஆராய்ச்சிகள் மற்றும் மானியங்கள்

(ஆ) கணக்கீடு

(இ) பதிவேடுகளைப் பராமரித்தல்

(ஈ) இருப்புக் கட்டுப்பாடு

(உ) ஊழியர் நிர்வாகம்